**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி,</u>**

<u>முன்னிலை:</u> திரு.Tr. S.K.P.DILIPBABU., M.A.M.L.,

நீதித்துறை நடுவர்,

காட்பாடி,

2026 வது வருடம் மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>குற்றப்பல்வகை மனு எண்.354/2026</u>**

விஜயகுமார் த/பெ மூர்த்தி ... மனுதாரர்

//எதிராக//

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
திருவலம் காவல் நிலையம்,
குற்ற எண்.162/2025 ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 12.03.2026 இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்து மனுதாரர்/கோருரிமையாளர் தரப்பில் திரு.R.கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், அரசுத்தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், அரசுத் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான ஆட்சேபனையை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1.இருபுறமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கில் கைப்பற்றப்பட்ட TN23 DH 1161, ChassisNO. ME4KC404FRA147366, EngineNo. KC40EA3147414 என்ற HONDA UNICORN இருசக்கர வாகனமானது மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மேற்படி TN23 DH 1161 என்ற Honda Unicorn என்ற இரு சக்கர வாகனம் திருவலம் காவல் நிலையத்தினரால் குற்ற எண். 162/2025 என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டு, இதச பிரிவுகள் U/S 7(5), 20(2) COTP ACT ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்பு காவல்துறையினரால் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு சி.பி.நம்பர்.311/2025 என எடுக்கப்பட்டு, தற்போது காவல் நிலைய பொறுப்பில் இருப்பதாகவும் TN23 DH 1161 என்ற Honda Unicorn என்ற இருசக்கரவாகனத்தை பொறுத்து நீதிமன்றம் விதிக்கும் சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட தயாராக இருப்பதாகவும், மேற்படி வாகனத்தை நீதிமன்றம் கோரும் போது, தவறாமல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக இருப்பதாகவும், தனக்கு சொந்தமான வாகனத்தை இடைக்காலமாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

2.அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் திருவலம் காவல் நிலையம் குற்ற எண் 162/2025 இதச பிரிவுகள் U/S 7(5), 20(2) COTP ACT ன், கீழ் இவ்வழக்கில் மனுதாரர் விஜயகுமார் த/பெ மூர்த்தி என்பவருக்கு வழக்கு சொத்தான TN23 DH 1161 , Honda Unicorn என்ற இருசக்கர வாகனத்தை திரும்பி அளிக்கும் பட்சத்தில் மேற்படி

உருமாற்றம் செய்யவோ அடமானம் வைக்கவோ கூடும் என்பதாலும் நீதிமன்ற விசாரணையின் போது உரியநேரத்தில் ஆஜர்ப்படுத்த இயலாமல் போகும் என்பதாலும் வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை மனுதாரருக்கு திருப்பி அளிக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது,

3. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பில் கூறியுள்ள TN23 DH 1161 ChassisNO. ME4KC404FRA147366, EngineNo. KC40EA3147414 என்ற இருசக்கர வாகனமானது மனுதாரருக்கு சொந்தமானது என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர் நீதிமன்றம் விதிக்கும் சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக கூறியதை கருத்தில் கொண்டும், இம்மனுவானது கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1)இவ்வழக்கு சொத்தான மதிப்பான ரூ. 1,00,000 /–த்திற்கு ஒரு பிணையதாரர் ஆறு மாத காலத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் உரிய முகவரி ஆவணங்களுடன் பார்ம் எண்.46–யை இணைக்கவேண்டுமென்றும், பிணை முறிப்பத்திரத்தை எழுதி, நிரந்தர முகவரி ஆவணத்துடன் இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கவேண்டும் என்றும்,

2)வழக்குத் சொத்தின் முப்பரிமாண புகைப்படம் மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 65(B) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

3) வழக்குச் சொத்திற்கு பஞ்சநாமா தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

4)மேற்படி சொத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, சொரூப மாற்றம் செய்யவோ கூடாது. நீதிமன்றம் கோரும் பட்சத்தில் தவறாமல் இந்நீதிமன்றம் முன்பு ஆஜர் செய்ய வேண்டும்.

5) TN23 DH 1161, என்ற Honda Unicorn என்ற இருசக்கர வாகனத்தின் Original RC புத்தகத்தை சமர்பித்து நகலுடன் ஒப்பிட்டு திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 12.03.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.